STC.No. 429-2026
நாள் 19.06.2026.
P.W.1 – (முருகன் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் கோழி பண்ணை வைத்து தொழில் செய்வதற்கு சிறு தொழில் உரிமம் பெற்றுள்ளேன். அந்த சிறு தொழில் வரவு செலவை என் வங்கி கணக்கில் முறையாக பராமரித்து வருகிறேன் என்றால் சரி. நான் அந்த சிறு தொழில் சம்மந்தமாக வரவு செலவிற்கு முறையாக வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரி. அந்த சிறு தொழில் போக மற்ற வருமானங்களையும் என் வருமான வரியையும் நான் முறையாக தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரி. நான் இந்த வழக்கின் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ.2 லட்சத்தை என் வருமான வரிக் கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் வருமான வரிக் கணக்கு ஜுலை மாதத்தில் தாக்கல் செய்வேன் அப்போது காட்டிவிடுவேன். நான் ரூ.2 லட்சத்தை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா அல்லது என் கையிருப்பில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்று என் நிருபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆம். நான் எதிரி எனக்கு 20 ஆண்டுகளாக பழக்கம் என்றும் இந்த வழக்கு கடனுக்கு முன்னும் எதிரிக்கு பல முறை கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளதைக் காட்ட என் வருமான வரிக் கணக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, வருமான வரிக் கணக்கில் சொல்லியுள்ளேன்.

நான் வழக்கு கடனிற்கு முன் எதிரிக்கு பல முறை கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளது எப்போது எல்லாம் கடன் கொடுத்தேன் அதனை எதிரி எப்போது திருப்பி செலுத்தினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரி. எதிரி என்னிடம் எக்காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றாலும் நான் எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு 20 ஆண்டுகளாக பழக்கம் என்று சொல்வது குடும்ப ரீதியாக பழக்கம் என்றால் சரியல்ல, அரசியல் ரீதியாக பழக்கம். நானும் எதிரியும் ம.தி.மு.க.வில் 10 ஆண்டுகளாக இருந்தோம். பின்னர் அ.ம.மு.க. கட்சியில் ஒன்றாக இருந்தோம். அ.ம.மு.க. கட்சியில் எதிரி ராஜபாளையம் நகரச் செயலாளராக இருந்தார். நான் மாவட்ட அணி வர்த்தக செயலாளராக இருந்தேன்.

எனக்கு எதிரியுடன் அரசியலில் பழக்கம் என்பதால் எனக்கு எதிரியின் குடும்ப விபரங்கள், வியாபார விபரங்கள் தெரியும் என்றால் எனக்கு அவ்வளவாக தெரியாது. எதிரியின் தம்பி ஆறுமுகம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் தம்பி ஆறுமுகமும் அ.ம.மு.க கட்சியை சேர்ந்தவர் என்றாலும் நான் ஆறுமுகத்திடம் எடுபிடியாக வேலை பார்த்தேன் என்றாலும் சரியல்ல. ஆறுமுகத்துக்கும் எதிரிக்கும் இடையே வீடு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு ஊரில் பேச்சுவார்த்தை நடந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரி என்னிடம் கடன் கேட்ட சமயமோ எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லும் சமயமோ சாட்சிகள் முன்னிலையில் எதிரி பணம் கேட்டதாகவோ நான் பணம் கொடுத்ததாகவோ நான் என் சட்ட அறிவிப்பு, நிருபண வாக்குமூலம் மற்றும் புகார்மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. வழக்கு காசோலை தவிர்த்து எதிரி எனக்கு வேறு எந்த ஆவணமும் எழுதிக் கொடுத்ததாகவோ என் சட்ட அறிவிப்பு, நிருபண வாக்குமூலம் மற்றும் புகார்மனுவில்

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

என் ஆடிட்டர் என் வங்கி கணக்கு எவ்வாறு செய்யவேண்டும் என்று சொன்னார் என்றால் சரி. ரூ.20,000/–ற்கு மேல் பணம் கொடுக்கவேண்டும் என்றால் வங்கி மூலமாகதான் கொடுக்கவேண்டும் என்பது எனக்கு தெரியாது. ரூ.2 லட்சம் பெரிய தொகையானதை நான் தனிப்பட்ட முறையில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் ரூ.2 லட்சத்தை எவ்வாறு ஏற்பாடு செய்து எதிரிக்கு கொடுத்தேன் என என் சட்ட அறிவிப்பு, நிருபண வாக்குமூலம் மற்றும் புகார்மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எனக்கு ரூ.2 லட்சம் கொடுப்பதற்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் அவர் தம்பிக்கும் ஊரில் நடந்த பேச்சுவார்த்தையில் வீடு அண்ணனாகிய எதிரிக்கும் அதற்கான பங்கு தொகை ரூ.2 லட்சம் தம்பியாகிய ஆறுமுகத்திற்கு எதிரி கொடுக்கவேண்டும் என பேசியதன் படி அந்த தொகைக்கு ஆதரவாக ஆறுமுகத்திடம் எதிரி கொடுத்த காசோலையைக் கொண்டு, நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒரு காசோலையை ஒரு நபர் கொடுக்கும்போது கொடுக்கும் நபர் முன்னும் பின்னும் கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் காசோலையில் Cross செய்து கொடுத்தால் பின் பக்கம் கையொப்பம் செய்வது அவசியம் இல்லை. எதிரி பூர்த்தி செய்யாத காசோலையை கையொப்பம் செய்து அவர் தம்பி ஆறுமுகத்திடம் கொடுத்ததை எடுத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எக்காலத்திலும் நான் ரூ.2 லட்சம் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி என்னிடம் வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் காசோலை தொகை ரூ.2 லட்சம் எதிரி எனக்கு சட்டப்படியாக செலுத்தப்படவேண்டியது அல்ல என்றாலும் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

19/6/24

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.